செ.வெ.எண்:14 நாள்–06.12.2017.

**பத்திரிக்கைச் செய்தி**

கரூர் மாவட்டத்தில் 01.01.2018 –ஆம் தேதியை தகுதியான நாளாகக் கொண்டு 03.10.2017 முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வாக்காளர் பட்டியல் சிறப்பு சரிபார்ப்பு பணிகள் 30.11.2017 வரை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், மேற்படி பணிகளை முழுமையாக மேற்கொள்ள ஏதுவாக 15.12.2017 வரை மேலும், 15 நாட்கள் கால நீட்டிப்பு செய்து இந்திய தேர்தல் ஆணையத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி சிறப்பு சரிபார்ப்பு பணிகளின்போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்கம் செய்ய, திருத்தம் செய்ய மற்றும் இடமாற்றம் செய்ய உரிய படிவங்களில் தகுதியான வாக்காளர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும், பெறப்படும் விண்ணப்பங்களை தலவிசாரணை செய்யும் பொழுது வாக்காளர் பட்டியலில் உள்ள அனைத்து விவரங்களையும் சரிபார்த்திட வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்துள்ளவர்களின் பெயர், முகவரி, கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட விவரங்களை சேகரித்து அவ்விவரங்களில் திருத்தங்கள் ஏதும் இருப்பின் அதனை சரிசெய்ய படிவம் 8 பெற்றும் இறந்துபோன மற்றும் நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களை நீக்கம் செய்ய படிவம் 7 பெற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், 01.01.2018 ந் தேதியில் 18 வயது பூர்த்தியடையும் தகுதியான நபர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்திட படிவம் 6 பெற்றும், 01.01.2019 ந் தேதியில் 18 வயது நிறைவடையும் எதிர்கால வாக்காளர்கள் குறித்த விவரங்கள் பெற்றும், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் வாழும் தகுதியான நபர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்திட படிவம் 6A பெற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. மேற்படி பணிகளை ஸ்மார்ட் போன் (Android Mobile) மூலமாகவோ அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட படிவங்கள் மூலமாகவோ மேற்கொள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் வீடுகளுக்கு வருகை தரும்போது அவர்கள் கோரும் விவரங்களை அளித்து வாக்காளர் பட்டியலை செம்மைப்படுத்த முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு.கு.கோவிந்தராஜ்**, இ.ஆ.ப கேட்டுக் கொள்கிறார்.

**செய்தி வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர்.**